Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register CC. 191/2016
Sessions prosecution
depositions of witness for PW1 chief continuation

| | | |
|---|---|---|
| Time | : | 3.35 pm –4.00pm |
| Name | : | திரு. பிரபு |
| Father name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 29th day of January 2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை தொடர்ச்சி.

இவ்வழக்கில் எனது நிறுவனத்தில் திருடு போன பொருட்களை யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரிய வரவில்லை. ஆனால் பொருட்களை கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்தில் இருந்து தகவல் வந்ததால், நான் அங்கு சென்று பொருட்களை அடையாளம் காட்டினேன். இப்போது அந்த பொருட்களை என்னால் அடையாளம் காட்ட இயலும். **இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் லைன் ராடு எண்ணிக்கை 150 மற்றும் High adjustment Liver எண்ணிக்கை 200 ஆகியவை அடங்கிய மூட்டை தான் அந்த திருடு போன பொருள் ஆகும். அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.பொ.1** ஐ தற்போது நீதிமன்றத்தில் இருந்து மனு செய்து

பெற்று கொள்ள தயாராக இருக்கிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

புகார் கொடுக்கும் போது திருடு போன பொருட்களின் விலை மதிப்பை புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுக்கும் போது திருடு போன பொருட்களுக்கான ரசீது இணைத்து கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இப்ப வரைக்கும் நிறுவனத்தில் உள்ள பொருட்களை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் இரவு காணாமல் போனது காலையில் புகார் கொடுத்தேன். சா.பொ.1 எங்கள் நிறுவனத்திற்கு உரியது என்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த எதிரிக்கும், வழக்கு பொருட்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.